27.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## விபத்துகளைத் தவிர்க்க கால்நடைகளுக்கு ஒளிரும் பட்டைகள்



இரவு நேரத்தில் விபத்துகளில் சிக்கி தெரு நாய்கள், மாடுகள் இறப்பதைத் தடுக்க, ஒளிரும் பட்டைகளை அணிவிக்கப்பட உள்ளன. இந்திய மக்கள் அமைப்பின் (பிஎஃப்சிஐ) எனும் தொண்டு நிறுவனம் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக அமைப்பின் தலைவர் அருண் பிரசன்னா கூறியது:- இரவு நேரங்களில் வாகன விபத்துகளில் சிக்கி, தெரு நாய்கள், மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் இறக்கின்றன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இரவு நேரங்களில் கால்நடைகள் சாலைகளைக் கடப்பது வாகன ஓட்டிகளுக்கு தெரிவதில்லை என்று தெரிய வந்தது.

இதன் காரணமாக விபத்துகளைத் தவிர்ப்பதற்காக சென்னையில் உள்ள தெருநாய்கள், தெருவில் சுற்றித் திரியும் மாடுகளுக்கு ஒளிரும் பட்டைகளை அணிவிக்கும் திட்டத்தை செயல்படுத்த உள்ளோம்.
ஆரஞ்சு நிறத்தில் உள்ள இந்தப் பட்டைகளை அவற்றுக்கு அணிவித்தால் இரவு நேரத்தில் அது ஒளிரும். இதன் காரணமாக விபத்துகள் பெருமளவில் தவிர்க்கப்படும்.

தன்னார்வத் தொண்டர்களின் உதவியுடன் முதல் கட்டமாக 1,000 தெரு நாய்கள், மாடுகளுக்கு பட்டைகளை அணிவிக்க உள்ளோம். விலங்குகளுடன் பழகுவது குறித்து தன்னார்வத் தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்ட பின்பு அவர்கள் களத்தில் பணியாற்றுவார்கள்.

இந்த ஆண்டுக்குள் சென்னையில் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு இந்தப் பட்டைகளை அணிவிக்கத் திட்டமிட்டுள்ளோம். சென்னையைத் தொடர்ந்து, கோவையிலும் இந்த முயற்சியை ஆரம்பிக்க உள்ளோம் என்றார்.

**"சத்துணவில் பால் வழங்குவதால் கால்நடை விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும்'**

சத்துணவில் பால் வழங்கும் திட்டத்தால், கிராம கால்நடை விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் என திருவள்ளூரில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட மு.க. ஸ்டாலின் கூறினார்.

திருவள்ளூர் தொகுதி திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன், திருத்தணி தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஏ.ஜி.சிதம்பரம் ஆகியோரை ஆதரித்து திருவள்ளூரில் அண்மையில் மு.க.ஸ்டாலின் பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

திமுக தேர்தல் அறிக்கையில் கூறியபடி, ஆவின் பால் விலை 7 ரூபாய் குறைக்கப்படும், மேலும் சத்துணவில் முட்டையுடன் பால் சேர்த்து வழங்கும் திட்டத்தால் கிராம கால்நடை விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். அதுபோல் மாதத்துக்கு ஒருமுறை மின் கட்டணம் செலுத்தும்

நடைமுறை உருவாக்கப்பட்டால், ரூ. 200 முதல் ரூ. 2,000 வரை மின் கட்டணம் குறைய வாய்ப்பு உள்ளது.

அனைத்து ஒன்றியங்களிலும் விவசாயிகளின் வசதிக்காக நெல் கொள்முதல் மையங்கள் அமைக்கப்படும். விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வழிவகை செய்யப்படும். திமுக ஆட்சிக்கு வந்தால் மக்களைத் தேடிச் செல்லாத அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## குறைந்த நீரில் உளுந்து சாகுபடி செய்ய யோசனை

புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் குறைந்த நீரில் உளுந்து சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம் என வேளாண்துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை வட்டார வேளாண்மை விற்பனை கிடங்கு, ஆதனக்கோட்டை துணை விற்பனை கிடங்கில் விவசாயிகளுக்கு தேவையான வம்பன் 6 ரக உளுந்து விதைகள் விற்பனைக்கு உள்ளது. வம்பன்-6 ரகம் 65 முதல் 70 நாட்கள் வயதும், மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தியுடையதாகவும்,ஒரே சமயத்தில் அறுவடைக்கு தயாராகக் கூடிய ரகமாகவும் உள்ளது. எனவே வம்பன்-6 உளுந்து ரகத்தைப் பயன்படுத்தி இந்தக்கோடையில் நெற்பயிருக்கு தேவைப்படும் நீரின் அளவை விட மூன்றில் ஒரு பங்கு நீர் மட்டும் உளுந்து பயிருக்கு பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

## உணவு பதப்படுத்துதல் துறை மாணவிகளுக்குப் பயிற்சி

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இந்திய பயிர்பதன தொழில்நுட்பக் கழகத்தில் உணவு பதப்படுத்துதல் துறையின் இறுதி ஆண்டு 22 மாணவிகள், கிராமப்புற வேளாண்சார் தொழில் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 10 நாள்கள் பயிற்சி பெற்றனர்.

கிராமப்புற வேளாண் சார் தொழில் வளர்ப்புத் திட்டத்தை திட்ட ஒருங்கிணைப்பாளர் ரெ. பாஸ்கரன், இந்திய பயிர்ப் பதன தொழில்நுட்பக் கழக முனைவர் விஜயலட்சுமி, உதவிப் பேராசிரியர்கள் அ. காமராஜ், வி. சிவக்குமார், க.ஞா. கவிதா ஸ்ரீ, ராஜாரமேஷ், ச. சரவணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

திருவாரூர் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கு நேரில் சென்று, விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

இதன் ஒரு பகுதியாக ஆலங்குடி, சித்தமல்லி, ராயபுரம் போன்ற கிராமங்களில் உள்ள பல தரப்பட்ட விவசாயிகளின் வாயிலாக அங்குள்ள மண்வளம், பயிர்கள் மற்றும் வேளாண் முறைகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவற்றின் மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இத்துடன் அவர்களுக்கான மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள், அரசு மானியங்கள், எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ. லைசன்ஸ் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன.

இதனிடையே, திருவாரூர் மாவட்ட வேளாண் வணிக வளாகத்தின் துணை இயக்குநரை நேரில் சந்தித்து வேளாண் வணிகத் துறையின் முக்கியத்துவம் பற்றியும் அந்த மாணவிகள் அறிந்து கொண்டனர்.

## உணவு சேமிப்பில் அறிவியல் முறை: மக்களவையில் அதிமுக வலியுறுத்தல்

நாட்டில் உணவு தானியங்கள் வீணாகாமல் சேமிக்கும் வகையில் அறிவியல் ரீதியில் பூச்சிகள் கட்டுப்பாடு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று மக்களவையில் கிருஷ்ணகிரி தொகுதி அதிமுக உறுப்பினர் கே.அசோக்குமார் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக மக்களவையில் செவ்வாய்க்கிழமை விதி எண் 377-இன் கீழ் அவர் முன்வைத்த கோரிக்கை:

நாட்டில் அறிவியல் முறையற்ற வழிமுறைகள், பாதுகாப்பற்ற நிலை ஆகியவற்றால் உணவு தானியங்கள் 10 சதவீதம் அளவுக்கு வீணாகின்றன.

சேமிப்பு தொழில்நுட்பங்களில் போதிய அறிவியல் ஞானம் இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான டன் உணவு தானியங்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுகின்றன.

எலிகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் ஆகியவை நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன.

ஆகவே, எதிர்காலத்தில் உணவு தானியங்கள் சிறிதும் விரயமாகாமல் இருக்க உரிய சேமிப்பு தொழில்நுட்பங்களையும், பூச்சி கட்டுப்பாடு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

## "பெங்களூரை பசுமையாக்க மரம் வளர்ப்போம்'

பெங்களூரை பசுமையாக்க வீடுதோறும் மரம் வளர்ப்போம் என்று, நடிகர் ராகவேந்திர ராஜ்குமார் வேண்டுகோள் விடுத்தார்.

வசந்த் நகர் குடியிருப்போர் சங்கத்தின் சார்பில் பெங்களூரு வசந்த் நகரில் அண்மையில் நடைபெற்ற மரக் கன்றுகள் நடும் நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்து அவர் பேசியது:

கண்களை தானம் செய்வதில் என் தந்தை ராஜ்குமாருக்கு ஆர்வம் இருந்ததை தாங்கள் அனைவரும் அறிவீர். மேலும் தன்னுடைய கண்களையும் தானமாக வழங்கினார். அதேபோல, சுற்றுச்சூழலிலும் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. எங்களது வீட்டில் ஏராளமான மரம் செடிகளை வளர்த்திருக்கிறார்.

பெங்களூரு மாநகரம் எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும், அதற்கு மரங்களை வளர்க்க வேண்டும் என்பதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். மரங்களை வளர்ப்பதோடு, அதை நமது குடும்ப உறுப்பினரை போல பராமரிக்க வேண்டும் எனக் கூறினார்.

அண்மைக் காலமாக பெங்களூரில் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. இதற்கு மரங்களின் அடர்த்தி குறைந்ததே காரணமாகும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். எனவே, பெங்களூரு மாநகரை பசுமை நகரமாக பராமரிக்க மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். மக்கள் அனைவரும் தங்களது வீடுகளின் முன் மரக் கன்றுகளை நடவேண்டும்

என்றார். நிகழ்ச்சியில், சங்கச் செயலாளர் ராஜ்குமார்துகர், ட்ரீஸ் ஃபார் ப்ரீ அமைப்பு இயக்குநர் ஜேனட், ஸ்டார்டிங் பிளாக்ஸ் இந்தியா அமைப்பு நிறுவனர் விஜய்குரோவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இளநீர் நேரம்**

வெயில்காலத்தில் இளநீர் விற்பனை அதிகம். இளநீரை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நல்லது என்ற கருத்து தற்போது மறுக்கப்படுகிறது. ஏனெனில் இளநீரில் உள்ள அமிலத்தன்மை வயிற்றில் புண்ணை உண்டாக்கும். ஏதேனும் ஓர் உணவைச் சாப்பிட்ட பின்னரே இளநீரை அருந்த வேண்டும். இளநீரில் பச்சை இளநீர், செவ்விளநீர், ரத்த சிவப்பில் உள்ள இளநீர் என பல்வேறு வகைகள் உள்ளன. எந்த வகை இளநீராக இருந்தாலும் எல்லாவற்றிலுமே மருத்துவக் குணங்கள் உள்ளன. செவ்விளநீர் தான் சிறந்தது என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. இளநீர் குடற்புழுக்களை அழிக்கிறது.

**மண் தரம் குறைந்ததால் மிளகாய் செடி பாதிப்பு**

திருக்கழுக்குன்றம் : கடந்த ஆண்டு பெய்த கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மண் வளம் குறைந்து விட்டதால், மிளகாய் செடிகள் வளராமல் போயின.

திருக்கழுக்குன்றம் அடுத்த வழுவதுார் ஊராட்சியில், மிளகாய் பயிரிட்டு, பாதிப்படைந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:கடந்த மார்ச் மாதம் மிளகாய் செடி நடப்பட்டது. ஆனால், ஒன்று கூட வளரவில்லை. நான்கு மாதங்களுக்கு முன் பெய்த கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, நிலத்தில் உள்ள மணல், வேறு இடத்திற்கு அடித்து செல்லப்பட்டது. இதனால், மண்ணின் தரம் குறைந்ததால், நட்ட மிளகாய் செடி ஒன்று கூட

வளரவில்லை. இதற்காக கவர் அமைத்து, உரம் போட்டது, தண்ணீர் விட்டது எல்லாம் வீணானது. மண் வளத்தை சீராக்க, விவசாய துறை அதிகாரிகள் தான் தக்க ஆலோசனைகளை கூற வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## கொப்பரை விலை உயர்வு

ஈரோடு: ஈரோட்டை அடுத்த, எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை தேங்காய் ஏலம் வாரந்தோறும் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, 817 மூட்டை (100 கிலோ) வந்து இருந்தது. கடந்த வாரம் கிலோவுக்கு ரூ.2 வரை விலை கூடி இருந்தது. இந்த வாரம் கிலோவுக்கு, 3 ரூபாய் வரை விலை அதிகரித்தது. முதல் தரம் அதிகபட்சம், 60.80 ரூபாய், குறைந்த பட்சம், 57.65 ரூபாய், இரண்டாம் தரம் அதிக பட்சம், 56.90 ரூபாய், குறைந்தபட்சம், 40.65 ரூபாய் என விலை நிர்ணயிக்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் மார்க்கெட்டில் ஏற்பட்ட விலை உயர்வே, கொப்பரை தேங்காய் விலை உயர்வுக்கு காரணம் என்று, வியாபாரிகள் கூறினர். இரு வாரங்களில் கிலோவுக்கு ரூ.ஐந்து வரை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை தேங்காய் ஏலம் இங்கு நடக்கிறது. மே தினம் என்பதால் வரும், 1ம் தேதி தேங்காய் ஏலம் நடக்காது என்று, விற்பனை கூட அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஊடுபயிராக மேரக்காய் விவசாயிகள் ஆர்வம்

மஞ்சூர்: மஞ்சூர் பகுதிகளில், மேரக்காய் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மஞ்சூர் பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், கடந்த சில ஆண்டுகளாக, தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால், சிறு விவசாயிகள் அத்தியாவசிய தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாமல் அவதியடைந்து வருகின்றனர்.

இதனால், மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளான பெரியார்நகர், கைக்காட்டி, காசோலை, கோடேரி, கெந்தளா, குன்னகம்பை, மஞ்சக்கம்பை,

கரும்பாலம், சின்ன கரும்பாலம் உள்ளிட்ட பகுதிகளில், 3,000 ஏக்கர் பரப்பளவிலான தேயிலை தோட்டங்களில், ஊடுபயிராக மேரக்காய் பயிரிடப்பட்டு வருகிறது. மேரக்காய் விவசாயத்தில் செலவு குறைவாகவும், சந்தையில் அதிக விலை கிடைத்து வருவதால், மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## வெயிலின் தாக்கம் அதிகம் கருகி வரும் தேயிலை செடிகள்

கோத்தகிரி: கோத்தகிரி பகுதியின் பல இடங்களில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக, தேயிலை செடிகள் கருக துவங்கியுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரியின் பொருளாதாரம் தேயிலை விவசாயத்தை நம்பி உள்ளது. இடுப்பொருட்களின் விலையேற்றம், கூலி உயர்வு, பசுந்தேயிலைக்கு விலை குறைவு போன்ற காரணங்களால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நடப்பாண்டு, கடுமையான வறட்சி நிலவி வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு, மாவட்டத்தின் பிற பகுதிகளில் பெய்த மழை, கோத்தகிரி பகுதியில் பொய்த்துவிட்டது. இதனால், தேயிலை தோட்டங்களில், ஈரப்பதம் படிப்படியாக குறைந்து, தேயிலை செடிகள் கருக துவங்கியுள்ளது.

இனிவரும் நாட்களில், வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் என்பதால், தேயிலை தோட்டம் மேலும், பாதிப்படையும் அபாயம் உருவாகி வருகிறது. இதனால், கவலை அடைந்துள்ள விவசாயிகள், வருண பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடத்தி வருகின்றனர்.

## உதவி வேளாண் அலுவலர் மாவட்ட செயற்குழு கூட்டம்

நாமக்கல்: தமிழ்நாடு உதவி வேளாண் அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம், பரமத்தியில் நேற்று நடந்தது. மாவட்ட தலைவர் சேகர் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ராமசாமி கோரிக்கை குறித்து விளக்கி பேசினார். இதில், நாமக்கல் மாவட்டத்தில் புதிதாக பணியில் சேர்ந்த உதவி வேளாண் அலுவலர்களுக்கு பாராட்டு

தெரிவிக்கப்பட்டது. அரியலூர் மாவட்ட உதவி வேளாண் அலுவலர் ஸ்ரீதேவியை தாக்கிய வேளாண் அலுவலர் எழில்ராணியை கண்டித்து, மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்தியும், இதுவரை நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது. அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.உதவி வேளாண் அலுவலர்கள், 70 சதவீதம் பேருக்கு மேல், சட்டசபை தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளதால், மண் மாதிரி எடுக்கும் பணிக்கு இறுதி தேதி, மே, 30ம் தேதியில் இருந்து, ஜூன், 30ம் தேதி வரை கால நீட்டிப்பு செய்ய வேண்டும். என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மா, பலா பழங்கள் வருகை அதிகரிப்பு

விருதுநகர்: விருதுநகரில் பலாபழம், மாம்பழம் வரத்து அதிகரித்துள்ளது.

கோடை காலமான சித்திரை மாதத்தில் பலா, மாம் பழங்கள் சீசன் துவங்கி விடும். இந்தாண்டு ஜனவரி, பிப்., மாதங்களில் மழை பெய்யாததால் மா, பலா பழம் சீசன் தாமதமாகவே துவங்கியது. இதையடுத்து தற்போது விருதுநகருக்கு பலா பழங்கள் அதிகளவில் பட்டுக்கோட்டை பகுதிகளிலிருந்து வந்துள்ளன.

இதே போல் சேலம், நத்தம், ராஜபாளையம் பகுதிகளிலிருந்து அதிகளவில் காசாலட்டு, சப்பட்டை, கல்லாமை, பச்சரிசி, செங்கவரி போன்ற வகை மா பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன.

விருதுநகர் வியாபாரி தனபால்,“பலா பழம் தற்போது பட்டுகோட்டையிலிருந்து கெண்டு வரப்படுகிறது. கிலோ 35 ரூபாய் வீதம் விற்பனை செய்கிறோம். ஒரு பழம் குறைந்த பட்சம் 8 கிலோ முதல் 22 கிலோ வரை இருக்கும். கேரளா மாநில பலா பழம் இன்னும் வரவில்லை. அது வந்தால் பலா பழத்தின் விலை குறைய வாய்ப்புள்ளது. மாம்பழம் தற்போது வரத்துவங்கியுள்ளதால்,மா பழம் ரகத்திற்கு தகுந்த படி விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது கிலோ 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது ,” என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சிப்பிக் காளான் வளர்ப்பு




சிப்பிக் காளான் வளர்ப்பை தொழிலாகச் செய்ய ஆர்வம். அது லாபகரமானதா? எவ்வளவு முதலீடு தேவைப்படும்?

காளான் விற்பனையாளர் சஞ்சீவ்

சிப்பிக் காளான் உற்பத்தி செய்து விற்பது மிகச் சுலபமானது. சென்னை போன்ற இடத்து வெயிலைத் தாங்கி வளரக்கூடியது. சிப்பிக் காளான் சுவையிலும் நன்றாக இருக்கும். ஆனாலும், அதைப் பற்றிய விழிப்புணர்வு இன்னும் மக்களிடம் போதுமானதாக இல்லை. சிப்பிக் காளான் உற்பத்தி செய்ய 15க்கு 20 அளவுள்ள டென்ட் வேண்டும். அதற்கு 30 ஆயிரம் ரூபாய் செலவாகும். அது போக மண், விதை போன்றவற்றுக்கும், மாத சுழற்சிக்கும் 10 ஆயிரம் ரூபாய் தேவைப்படும்.

சிப்பிக் காளான் வளர்ப்பை கெமிக்கல் முறை, ஆர்கானிக் முறை என

இரண்டு வழிகளில் செய்யலாம். ஒரு கிலோ உற்பத்திக்கான செலவு 50 ரூபாய் மட்டுமே. ஆனால், அதை ஸ்டார் ஹோட்டல்களில் கிலோ 200 ரூபாய் வரை வாங்கிக் கொள்வார்கள். தினமும் விளைச்சல் இருக்கும்.

ஒரு பையில் 600 கிராம் அளவு பயிரிடலாம். அப்படிப் பார்த்தால் நாளொன்றுக்கு 20 பைகள் வரை உற்பத்தி செய்ய முடியும். ஆர்கானிக் முறை உற்பத்தியில் நோய்கள் தாக்கும் வாய்ப்புகள் அதிகம் என்பதால் தகுந்த பயிற்சியுடனும் கவனத்துடனும் செய்ய வேண்டும்.

## சிறுபாக்கம் நெல் கொள்முதல் நிலையத்தில் அதிகாரிகள் ஆய்வு

வேப்பூர், : வேப்பூர் அடுத்த சிறுபாக்கம் கிராமத்தில் அரசுக்கு சொந்தமாக நெல் கொள்முதல் நிலையம் உள்ளது. அதனை சுற்றியுள்ள 52 கிராம விவசாயிகள் இங்கு நெல் கொள்முதல் செய்து வந்தனர். இந்தாண்டும் விவசாயிகள் நெல் கொள்முதல் செய்ய சிறுபாக்கம் அரசு கொள்முதல் நிலையத்திற்கு கடந்த ஜனவரி முதல் வந்தனர். ஆனால் அதிகாரிகள் பல்வேறு காரணங்களை கூறி அலைக் கழிப்பு செய்தனர். இந்த சூழ்நிலையை பயன்படுத்தி பணம் பறிக்க சில புரோக்கர்கள் விவசாயிகளிடம் மூட்டைக்கு ரூ.30 விற்று தருவதாக கூறி சிலரை ஏமாற்றி வந்தனர்.

இதனை ஏற்க மறுத்த விவசாயிகளிடம் அடாவடி அணுகுமுறையை கடைபிடித்தனர். மேலும் கடந்த 3 மாதமாக நெல் மூட்டைகள் திறந்த வெளியில் இருப்பதால் மக்கும் சூழல் ஏற்பட்டது. இதனால் 200 கிராம விவசாயிகள் சிறுபாக்கம் அரசு கொள்முதல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இதன் எதிரொலியாக நேற்று காலை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தனசேகரன், மண்டல மேலாளர் பூவேந்திரன், வேளாண் தரகட்டுப்பாட்டு அலுவலர்கள் ராஜயோக்கியம், விஸ்வநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் குழு சிறுபாக்கம் அரசு கொள்முதல் நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அதனை தொடர்ந்து விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை காலதாமதம் செய்யாமல் கொள்முதல் செய்திடவும், புரோக்கர்கள் தலையீடு இல்லாமல் விவசாயிகள் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் மற்றும் புரோக்கர்கள் இதனை மீறி செயல்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்தனர்.

**புதன்சந்தையில் மாடுகள் விலை உயர்வு**

சேந்தமங்கலம் : நாமக்கல் மாவட்டம் புதன்சந்தை மாட்டுச்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்றது. திங்கள்கிழமை இரவு முதல் செவ்வாய் மதியம் வரை மாட்டுச்சந்தை கூடுவது வழக்கம். மாடுகளை வாங்க, கோவை, பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய பகுதிகளிலிருந்தும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்தும் வியாபாரிகள் வருவர். 2 நாட்களில் மட்டும் கோடிக்கணக்கில் வியாபாரம் நடைபெறும்.

இந்நிலையில் நேற்று கூடிய மாட்டுச்சந்தையில், கோடை வெயிலின் காரணமாக குறைந்த அளவே மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. கேரளா, பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்தனர். ேதவை அதிகரிப்பால், மாடுகளை வாங்க கடும் கிராக்கி ஏற்பட்டது. இதனால் மாடுகளின் விலை உயர்ந்தது. கடந்தவாரம் 32 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சிமாடு, இந்த வாரம் 34 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. இதேபோல 47 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு, 48 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. 6 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி, 5 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது.

**முட்டை விலை குளறுபடிக்கு தீர்வுகாண கோழிப்பண்ணையாளர்கள் கூட்டம் நாமக்கல்லில் 1ம் தேதி நடக்கிறது**

நாமக்கல் : முட்டை விலை குளறுபடிக்கு தீர்வுகாண, நாமக்கல்லில் கோழிப்பண்ணையாளர்கள் சந்திப்பு கூட்டம் 1ம் தேதி நடக்கிறது இதுகுறித்து, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு

குழுவின் தலைவர் செல்வராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் கோழிப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளை, சிறியவை, மீடியம், பெரிய சைஸ் என 3 வகையாக பிரித்துதான் வியாபாரிகள் வாங்கிச் செல்வர். தற்போது முட்டைகளை 8 வகையாக பிரித்து விலை வைக்கின்றனர்.

இதனால் அனைத்து பண்ணையாளர்களும் நஷ்டப்படுகின்றனர். இந்நிலையில், கடந்த 4 மாதமாக கரெக்ட் சைஸ் என்ற புதிய முட்டை வகையை வியாபாரிகள் கொண்டு வந்துள்ளனர். இதில் பெரும்பாலான முட்டைகளை கரெக்ட் சைஸ் விலையில் பண்ணையாளர்களிடம் இருந்து வியாபாரிகள் வாங்குகின்றனர். பெரிய முட்டை விலையைவிட, 10 காசு முதல் 20 காசு வரை குறைவாக வாங்கி, அதனை பெரிய முட்டை எனக்கூறி லைனில் விற்பனை செய்து வருகின்றனர். தற்போது கோடை வெயிலின் காரணமாக, பெரிய முட்டைகளே கரெக்ட் சைஸ் முட்டையாகதான் உற்பத்தியாகிறது.

வியாபாரிகளால் முட்டை கொள்முதலில் ஏற்பட்டுள்ள இந்த முரண்பாட்டை சரி செய்ய, வரும் 1ம் தேதி காலை 11 மணிக்கு நாமக்கல் கோஸ்டல் ரெசிடன்சி ஓட்டலில் பண்ணையாளர்கள் சந்திப்பு கூட்டம் நடக்கிறது. இதில் அனைத்து கோழிப்பண்ணையாளர்களும் கலந்து கொள்ளவேண்டும். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## நாமகிரிப்பேட்டையில் 1.10 கோடிக்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை கூட்டுறவு ஏல மையத்தில் வாரந்தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கும். இந்த வாரம் நடந்த ஏலத்தில் விரலி ரக மஞ்சள் 1000 மூட்டை, உருண்டை ரக மஞ்சள் 510 மூட்டை, பனங்காளி 700 மூட்டை என மொத்தம் 2210 மஞ்சள் மூட்டை விற்பனைக்கு வந்தது.

இதில் விரலி ரகம் குறைந்தபட்சமாக ரூ.8ஆயிரத்து 812 முதல் அதிகபட்சமாக ரூ.10 ஆயிரத்து 919 வரை ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்த பட்சம் ரூ.8 ஆயிரத்து 599 முதல் அதிக பட்சமாக ரூ.9 ஆயிரத்து 699க்கும் ஏலம் போனது. பனங்காளி ரகம் குறைந்தபட்சமாக

17 ஆயிரத்து 162க்கும் அதிகபட்சமாக 28 ஆயிரத்து 214க்கும் ஏலம் போனது. இதில் மொத்தம் ஒரு கோடியே பத்து லட்சம் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது.

## இரண்டாம் போக நெல் அறுவடை துவங்கிவிட்ட நிலையில் தேர்தல் ஆணையத்தின் அனுமதி கிடைக்காததால் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படவில்லை

ஈரோடு, : தடப்பள்ளி,அரக்கன்கோட்டை பாசன பகுதியில் இரண்டாம் போக நெல் அறுவடை துவங்கிவிட்ட நிலையில் தேர்தல் ஆணையத்தின் அனுமதி கிடைக்காததால் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படாமல் உள்ளது.

பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பகுதிகளுக்கு இரண்டாம் போக பாசனத்திற்காக கடந்த சில மாதங்களுக்கு முன்பு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதையடுத்து 25 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது.

கடந்த வாரத்தில் இருந்து அறுவடை பணிகள் ஆங்காங்கே துவங்கி உள்ள நிலையில் அரசின் நெல் கொள்முதல் மையங்கள் இன்னும் திறக்கப்படாமல் உள்ளதாகவும், இது குறித்து அதிகாரிகளிடம் கேட்டால் தற்போது தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் அரசு நிர்வாகம் உள்ளதால் கொள்முதல் நிலையங்கள் திறக்க தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் கொள்முதல் நிலையங்கள் திறப்பதில் காலதாமதம் ஏற்படும் என்று பதிலளித்து வருவதாக விவசாயிகள் கூறினர்.

இது குறித்து பாசன சபை தலைவர் தளபதி கூறும்போது, தடப்பள்ளி,அரக்கன்கோட்டை பாசன பகுதியில் 25 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு தற்போது அறுவடை பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. முதல்போக அறுவடையின் போது என்.ஜி.பாளையம், புதுவள்ளியம்பாளையம், டி.என்.பாளையம், காசிபாளையம், கூகலூர், கள்ளிப்பட்டி, கூகலூர் அக்தாணி, புதுக்கரைப்புதூர் உள்ளிட்ட ஒன்பது இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம், நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

இதே போல இரண்டாம் போக அறுவடையையொட்டி கடந்த முறை திறக்கப்பட்ட இடங்களிலேயே கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திடம் கடந்த 10 நாட்களுக்கு முன்பே கோரிக்கை விடுத்தோம். கோரிக்கை விடுத்து ஒரு வாரகாலத்திற்கும் மேலாகிவிட்டது. ஆனால் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கான அனுமதி பெற முடியாமல் உள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

தற்போது அறுவடை பணிகள் தொடங்கப்பட்டுவிட்ட நிலையில் கொள்முதல் நிலையங்கள் திறக்காததால் விவசாயிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் தலையிட்டு உடனடியாக கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தளபதி கூறினார்.

## கால்நடைகளுக்கு வெப்ப அயற்சி தடுக்க கால்நடை பராமரிப்புத்துறை அறிவுரை

ஈரோடு, : ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளதாவது, கோடைக்காலத்தில் குறிப்பாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிலவும் அதிகப்படியான சூரிய வெப்பம், காற்றில் அதிக ஈரப்பதம், நிலம் மற்றும் பாறைகளில் சூரிய ஒளிக்கதிர்கள் பட்டு பிரதிபலிப்பதால் ஏற்படும் வெப்ப கதிர்வீச்சு போன்ற பல்வேறு காரணங்களால் கால்நடைகளுக்கு வெப்ப அயற்சி ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகிறது. வெப்ப அயற்சி பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு அதிக அளவு மூச்சு இறைத்தல், அளவுக்கு அதிகமாக உமிழ்நீர் சுரந்து வாயில் இருந்து ஊற்றிக் கொண்டே இருத்தல், நடக்க முடியாமல் தள்ளாடுதல், ஈறுகள் ஊதா அல்லது இளஞ்சிவப்பாக மாறுதல் போன்ற அறிகுறிகள் காணப்படும்.

கால்நடைகளில் பால் உற்பத்தி மற்றும் இனப்பெருக்க திறனை பாதிப்பதோடு நோய் எதிர்ப்பு திறனையும் பாதிக்கிறது. கோடைக்காலங்களில் கால்நடைகள் நல்ல காற்றோட்டம் உள்ள இடத்தில் இருக்க வேண்டும். பெரும்பாலும் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெப்பம் அதிகமாக உள்ளதால் கால்நடைகளை

மேய்ச்சலுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். பொதுவாக மாட்டு கொட்டகை, ஆட்டுப்பட்டி ஆகியவற்றை நிழல் தரும் மரங்களை சுற்றி அமைக்க வேண்டும். ஓடு மற்றும் ஆஸ்பெட்டாஸ் போன்றவற்றால் ஆன கூரையாக இருந்தால் அதன்மேல் தென்னை, பனை ஓலைகள், உலர்ந்த புற்கள் போன்றவற்றை வைத்தும் வெப்ப தாக்குதலை குறைக்க வேண்டும். மதிய நேரங்களில் கால்நடைகளின் மீது குளிர்ந்த நீரை தெளிக்க வேண்டும்.

கால்நடைகள் குடிப்பதற்கு தேவையான அளவு குளிர்ந்த நீரை நிழல் உள்ள இடத்தில் வைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டியில் ஊற்றி வைக்க வேண்டும். கோடைக்காலங்களில் பசுந்தீவனம், அடர்தீவனங்களை அதிக அளவில் கொடுத்து உலர் மற்றும் நார் தீவன அளவை குறைத்துக் கொள்ள வேண்டும்.பசுந்தீவனங்களில் புரதசத்து அதிகம் உள்ள வேலி மசால், முயல் மசால் போன்ற பயிறு வகை தீவனங்களை அதிக அளவில் கொடுத்து கால்நடைகளுக்கு ஏற்படும் வெப்ப அயற்சியை தடுக்க கேட்டுக் கொண்டுள்ளார்.

## பலாப்பழம் வரத்து அதிகரிப்பு

திருப்பூர், : கேரள மாநிலத்தில் பலாப்பழம் சீசன் துவங்கியதால், திருப்பூர் பகுதிக்கு பலாப்பழம் வரத்து அதிகரித்துள்ளது. முக்கனிகளில் ஒன்றான பலாப்பழம் சீசன் தற்போது துவங்கி உள்ளது. தமிழகத்தில் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் தர்மபுரி ஆகிய பகுதிகளில் பலாப்பழம் விளைச்சல் அதிகம் உள்ளது. தவிர கேரளாவில் பலாப்பழ விளைச்சல் இந்தாண்டு அதிகரித்துள்ளது. இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிக்கு பலாப்பழம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கேரளா மற்றும் தமிழகத்தில் பிற பகுதியில் இருந்து திருப்பூர் மார்க்கெட்டுக்கு பலா வரத்து துவங்கி உள்ளது. சிறிய பழம் ரூ.100 முதல் ரூ.300 வரையும், பெரிய பழம் 200 முதல் 300 ரூபாய் வரை விற்கப்படுகிறது. பலா பழம் சீசன் துவங்கி உள்ளதால் அதிகளவில் மக்கள் விருப்பத்துடன் பலாப்பழத்தை வாங்கி செல்கின்றனர்.

## கடும் வெயிலால் மலர் பாத்திகளில் சணல் வலை அமைக்கும் பணி தீவிரம்

குன்னூர்,: குன்னூர் அருகே காட்டேரி பூங்காவில் கோடை சீசனுக்காக 30 வகையிலான 1.50 லட்சம் மலர் செடி நடவு செய்யப்பட்டது. கடந்த மாதங்களில் பெய்த பரவலான மழைக்கு மலர் செடிகள் நன்கு செழித்துள்ளது. இந்தாண்டு சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் பூங்கா முழுமையாக பொலிவுபடுத்தப்பட்டும், பழுதடைந்த செயற்கை நீரூற்றும் சரி செய்யப்பட்டுள்ளது. காட்சி கோபுரம், அலங்கார நடைபாதை, சிறுவர் பூங்கா, நிழல்குடை என அனைத்தும் முறையாக பராமரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் மலர் செடிகள் வாடிய நிலையில் காணப்படுகிறது.

வெயிலில் இருந்து மலர் செடிகளை பாதுகாக்க சணல் வலையை கொண்டு பாதுகாக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இந்தாண்டு சட்டமன்ற தேர்தல் நடப்பதால் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்கண்காட்சி, ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி ஆகிய 2 நிகழ்ச்சிகள் நடக்கிறது. இதனால் காட்டேரி பூங்காவிற்கு மலைப்பாதை, மலை ரயில் மூலம் செல்லும் சுற்றுலா பயணிகளும் அதிகளவில் வர கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களை மகிழ்விக்கும் வகையில் தோட்டக்கலை துறையினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கேரட் அறுவடை துவங்கியது

ஊட்டி,: மாவட்டத்தில் கேரட் அறுவடை துவங்கியுள்ளதால், தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பிரதான தொழிலாக உள்ளது. இதற்கு அடுத்தப்படியாக மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, உருளைக்கிழங்கு மற்றும் கேரட் ஆகிய பயிர்களே அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. இதில், மாவட்டத்தில் விளையும் கேரட்டிற்கு வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்புள்ளது. ஏராளமான விவசாயிகள் இதனை பயிரிடுகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கேரட்டை, விவசாய நிலங்களில்

இருந்து எடுத்து, அவைகளை கழுவி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் இந்த தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.350 முதல் 500 வரை கூலி கிடைக்கிறது. மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களாக கேரட் அறுவடை குறைந்த நிலையில் தற்போது கேரட் சீசன் மீண்டும் துவங்கியுள்ளதால், விவசாயிகள் மட்டுமின்றி, தொழிலாளர்களும் உற்சாகம் அடைந்துள்ளனர். கடந்த ஒரு வாரமாக கேரட் அறுவடையில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அறுவடை செய்யப்பட்ட கேரட் தற்போது வெளி மாவட்டம், மாநிலங்களுக்கு அனுப்பும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

## அரவைக்காக 1,100 டன் நெல் மூட்டைகள் சென்னைக்கு அனுப்பி வைப்பு

மயிலாடுதுறை : அரவைக்காக 1,100 டன் நெல் மூட்டைகள் மயிலாடுதுறையில் இருந்து நேற்று சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நாகை மாவட்டம் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி, குத்தாலம் ஆகிய தாலுகாக்களில் தமிழக அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகள் அரசு கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை, சீர்காழி, செம்பானர்கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள அரசின் நவீன அரிசி ஆலைகளில் நெல் அரவை செய்யப்படுகிறது. மேலும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள தனியார் அரிசி ஆலைகளுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று அரவைக்காக மயிலாடுதுறை அருகே உள்ள அரசு கிடங்குகளான பெருஞ்சேரி, குணதளபாடி போன்ற 5 கிடங்குகளில் இருந்து நெல்மூட்டைகளை லாரிகள் மூலம் ஏற்றிச்சென்றனர். மயிலாடுதுறை ரயில் நிலையத்தில் சரக்கு ரயிலில் 21 வேகன்களில் 2,750 மூட்டைகள் கொண்ட 1,100 டன் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டு சென்னை கொருக்குப்பேட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்

## குன்னூரில் 89 டிகிரி வெயில் பதிவு: தேயிலை செடிகளில் மகசூல் கடுமையாக பாதிக்கும்



குன்னூர்,

குன்னூரில் அதிகபட்சமாக 89 டிகிரி வெயில் பதிவாகியுள்ளதால் தேயிலை செடிகளில் மகசூல் கடுமையாக பாதிக்கும் என்று உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு தெரிவித்து உள்ளார்.

தேயிலை செடிகள் அறிமுகம்

நீலகிரி மாவட்டத்தின் முதுகெலும்பாக உள்ள தேயிலையை கடந்த 1832-ம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனியை சேர்ந்த சார்லஸ் புரூஸ் என்கிற

ஆங்கிலேயர்தான் அறிமுகப்படுத்தனார். இவர் தேயிலையின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார். நீலகிரி மாவட்டத்தில் தற்போது சுமார் 56 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தேயிலை செடிகளும், 2 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் காபி செடிகளும், 7 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் காய்கறி செடிகளும், 2 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் வாசனை திரவியங்களும் பயிரிடப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. மேலும் இதனை நம்பி பல ஆயிரம் தொழிலாளர்கள் உள்ளனர். இதனால் மாவட்டத்தின் பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்தும் முக்கிய காரணியாக தேயிலை விவசாயம் உள்ளது.

89 டிகிரி வெயில்

இந்த நிலையில் குன்னூர் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது மழையில்லாமல் கடும் வறட்சி நிலவி வருகிறது. பகல்நேரங்களில் வெயில் வாட்டி வதைப்பதால் பொதுமக்கள் அவதி அடைந்து வருகிறார்கள். உபாசி தேயிலை ஆராய்ச்சி மையத்தில் நேற்று 81 டிகிரி (பாரன்ஹீட்) வெப்பம் பதிவானது. இதேபோல் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளான மேலூர், கோத்தகிரி தாலுகாவில் பர்ன்சைடு, கூட்டாடா போன்ற பகுதிகளில் 89 டிகிரி வெயில் பதிவாகியுள்ளது.

குன்னூரில் இந்த ஆண்டு அதிகபட்சமாக 89 டிகிரி (பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகி உள்ளதால் தேயிலை செடிகளில் மகசூல் கடுமையாக பாதிக்கும் என்று உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

தேயிலை மகசூல் பாதிக்கும்

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாக கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம்

வரையுள்ள காலகட்டங்களில் 2 சதவீத பச்சை தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த மகசூல் பாதிப்பு தொடர்ந்து மழையில்லாமல் இருக்கும் பட்சத்தில் ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரை 17.5 சதவீதம் குறைவடைய வாய்ப்பு உள்ளது.

இதேநிலை காபி மற்றும் ரப்பர் பயிர்களிலும் உற்பத்தி பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. தேயிலை பயிரிடப்படும் கேரள மாநிலம் மற்றும் கோவை மாவட்டம் வால்பாறையில் மழை பெய்து உள்ளது.

இதனால் அங்கு வறட்சியின் பாதிப்பு அதிகமாக இல்லை. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் மழையில்லாத காரணத்தினால் இவ்வாறு அதிகபாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

குன்னூரில் கடந்த 2015-ம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை 55 செ.மீ.மழை பெய்து உள்ளது. ஆனால் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் வரை 8 செ.மீ.மழை மட்டுமே பெய்து உள்ளது.

இதனால் குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வறட்சியின் தாக்கம் அதிகரித்து உள்ளது. இதன்காரணமாக பச்சை தேயிலையின் மகசூல் குறைவடைய தொடங்கி உள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.

**அணைப்பட்டி வைகை ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் தண்ணீர்; குடிநீர் தட்டுப்பாடு நீங்கியது**



நிலக்கோட்டை,

அணைப்பட்டியில் உள்ள வைகை ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால், நிலககோட்டை ஒன்றிய பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் நீங்கி உள்ளது.

<u>வறண்ட வைகை ஆறு</u>

திண்டுககல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதிகளில் பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. இந்த பகுதி மக்களுக்கு தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரே குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் இந்த பகுதிகளில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது.

வைகை அணையிலும் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததால் அதில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இதனால் வைகை ஆறு வறண்டு மணல் பரப்பாக காட்சியளித்தது. ஆற்றில் அமைக்கப்பட்ட உறை கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளும் தண்ணீரின்றி வறண்டன.

இதனால் ஊராட்சி, பேரூராட்சி சார்பில் பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது.

<u>தண்ணீர் திறப்பு</u>

கிராமங்களில் வசிப்பவர்கள் அககம்பககம் வயல்களில் உள்ள கிணறுகளுக்கு சென்று தண்ணீர் எடுத்து வந்தனர். இந்தநிலையில் கடந்த 20–ந் தேதி வைகை அணையில் இருந்து குடிநீருக்காகவும், மதுரையில் நடைபெற்ற சித்திரை திருவிழாவிற்காகவும் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் வறண்டு போய் கிடந்த அணைப்பட்டி வைகை ஆற்றில் தற்போது தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.

மேலும் உறைகிணறுகளிலும், ஆழ்துளை கிணறுகளிலும் தண்ணீர் வரத்து ஏற்பட்டது. நீண்ட நாட்களுக்கு பிறகு தண்ணீர் வரத்து இருப்பதால் அந்த பகுதியில் இருக்கும் சிறுவர்கள் உள்பட அனைவரும் ஆற்றில் ஆனந்தமாக குளித்து வருகின்றனர். மேலும் இந்த பகுதி மக்களுக்கு கடும் பிரச்சினையாக இருந்த குடிநீர் தட்டுப்பாடும் நீங்கி உள்ளது. இதனால் நிலக்கோட்டை பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**அன்னவாசல் அருகே அடைகாக்காமல் முட்டையில் இருந்து கோழி குஞ்சு வந்த அதிசயம் ஆச்சரியத்துடன் பார்த்து சென்ற பொதுமக்கள்**



அன்னவாசல் அருகே அடைகாக்காமல் முட்டையில் இருந்து கோழி குஞ்சு வந்த அதிசயம் நடந்துள்ளது. இதை ஆச்சரியத்துடன் அப்பகுதி பொதுமக்கள் பார்த்து செல்கின்றனர்.

கோழி குஞ்சு

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே முக்கண்ணாமலைப்பட்டியை சேர்ந்தவர் அபுபக்கர் சித்திக். இவர் தனது வீட்டில் ஒரு கோழி வளர்த்து வருகிறார். இந்நிலையில் இந்த கோழி கடந்த பதினைந்து தினங்களாக தொடர்ந்து முட்டையிட்டு வந்தது. அந்த முட்டைகளை அபுபக்கர் சித்திக் தனது வீட்டில் உள்ள ஒரு அலமாரியில் சேமித்து வைத்துள்ளார். இந்நிலையில் நேற்று அந்த அலமாரியில் இருந்து கோழி குஞ்சின் சத்தம் வந்து கொண்டிருந்தது. இதையடுத்து அந்த அலமாரியை திறந்து பார்த்த அபுபக்கர் சித்திக் அதிர்ந்து போனார்.

ஏராளமான பொதுமக்கள்

அவர் சேமித்து வைத்திருந்த ஒரு முட்டையிலிருந்து ஒரு குஞ்சு வெளியில் வந்து கத்திக் கொண்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து அடை வைக்கப்படாமல் கோழி குஞ்சு எப்படி வந்தது என திகைத்து போனார். இது குறித்து கேள்விப்பட்ட அப்பகுதி பொதுமக்கள் ஏராளமானோர் அந்த கோழிகுஞ்சை ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

இது குறித்து அந்த பகுதியில் கோழிப்பண்ணை வைத்து இருக்கும் ஒருவர் கூறுகையில், ‘‘வெப்பத்தில் கோழிமுட்டை பொரிக்க வாய்ப்பு உள்ளது’’. தற்போது புதுக்கோட்டை பகுதியில் 102 டிகிரிக்கு மேல் வெயில் அடித்து வருகிறது.அதனால் ஏற்பட்ட அதிக வெப்பத்தில் கோழி அடை காக்காமலேயே முட்டை பொரித்து குஞ்சு வெளிவந்துள்ளது என்றார்.